முரசொலி
-6 OCT 2022



செக் குடியரசு நாட்டில் நடைபெறும் MSME சர்வதேச கண்காட்சியில் கலந்து கொள்ளச் சென்றுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசனை 4.10.2022 அன்று அந்நாட்டின் தொழில் மற்றும் வணிகத் துறை உயர் அலுவலர்கள் சந்தித்து இந்திய குழுவினர் மேற்கொள்ளும் சுற்றுப் பயணம் குறித்த விவரங்களை எடுத்துரைத்தனர். அப்போது தமிழக அரசின் MSME துறை அரசு செயலாளர் அருண்ராய், நிதித் துறை அரசு துணைச் செயலாளர் சிபி.ஆதித்யா செந்தில்குமார், தொழில் வணிகத் துறை கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சாவ், மற்றும் தமிழக MSME தொழில் துறை குழுவினர், செக் குடியரசு உயர் அலுவலர்கள் உடனிரு ந்தனர்.

முரசொலி
-6 OCT 2022



செக் குடியரசு நாட்டில் நடைபெறும் MSME சர்வதேச கண்காட்சியில் கலந்து கொள்ளச் சென்றுள்ள தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசனை 4.10.2022 அன்று அந்நாட்டின் தொழில் மற்றும் வணிகத் துறை உயர் அலுவலர்கள் சந்தித்து இந்தியக் குழுவினர் மேற்கொள்ளும் சுற்றுப் பயணம் குறித்த விவரங்களை எடுத்துரைத்தனர். அப்போது தமிழக அரசின் MSME துறை அரசு செயலாளர் அருண்ராய், நிதித் துறை அரசு துணைச் செயலாளர் சிபி.ஆதித்யா செந்தில்குமார், தொழில் வணிகத் துறை கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சாவ், மற்றும் தமிழக MSME தொழில் துறை குழுவினர், செக் குடியரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் தொழில் தொடங்க

# செக் குடியரசு நாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்!

ப்ரோனோ (செக்), அக்.6- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டினை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக உருவாக்கிட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் பல்வேறு புதிய சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அரசு முறைப் பயணமாக செக் குடியரசு நாட்டில் நடைபெறும் MSV கண்காட்சியில் பங்கு கொள்ள 3.10.2022 அன்று இரவு செக் குடியரசு நாட்டிற்கு சென்றடைந்தார்.

அவரை 4.10.2022 அன்று செக் குடியரசு நாட்டின் தொழில் மற்றும் வணிக துறை அரசு செயலர் மற்றும் உயர் அலுவலர்கள் வரவேற்று தொழில் முதலீடுகள் குறித்தும், சுற்றுப் பயண விவரங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் MSME குழுவினரும் EVEKTOR விமானம் தயாரிக்கும் தொழிற்சாலையினையும், கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலையினையும் பார்வையிட்டார்கள். இந்த ஆய்வின் போது அமைச்சர் தா.மோ.அன்பரசன் அந்நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார். இந்த ஆய்விற்குப் பிறகு MSV கண்காட்சி அரங்கிற்குச் சென்று அரங்கினைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் வி. அருண் ராய், நிதித்துறை அரசு துணைச் செயலாளர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் பச்சாவ் மற்றும் தமிழக MSME தொழில் துறை குழுவினர், செக் குடியரசு உயர் அலுவலர்கள், செக் குடியரசின் தொழில் முதலீட்டா ளர்கள் கலந்து கொண்டனர்.




செக் குடியரசு நாட்டில் நடைபெற்ற MSV கண்காட்சியின் துவக்க விழாவில் தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.